ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 8.1 – தேவிமாராவார்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 8.1 – தேவிமாராவார்

‡ தேவிமார் ஆவார் திருமகள் பூமி ⋆
ஏவ மற்றமரர் ஆட்செய்வார் ⋆
மேவிய உலகம் மூன்றவை ஆட்சி ⋆
வேண்டு வேண்டுருவம் நின் உருவம் ⋆
பாவியேன் தன்னை அடுகின்ற கமலக் கண்ணதோர் ⋆
பவள வாய் மணியே ⋆
ஆவியே ! அமுதே ! அலை கடல் கடைந்த அப்பனே ⋆
காணும் ஆறருளாய் ‖ **8.1.1** ‖

காணும் ஆறருளாய் என்றென்றே கலங்கிக் ⋆
கண்ண நீர் அலமர ⋆
வினையேன் பேணும் ஆறெல்லாம் பேணி ⋆
நின் பெயரே பிதற்றும் ஆறருள் எனக்கந்தோ ⋆
காணும் ஆறருளாய் காகுத்தா ! கண்ணா ! ⋆
தொண்டனேன் கற்பகக் கனியே ⋆
பேணுவார் அமுதே ! பெரிய தண் புனல் சூழ் ⋆
பெரு நிலம் எடுத்த பேர் ஆளா ! ‖ **8.1.2** ‖

எடுத்த பேர் ஆளன் நந்தகோபன் தன் ⋆
இன் உயிர்ச் சிறுவனே ⋆
அசோதைக்கடுத்த பேர் இன்பக் குல இளங்களிறே ⋆
அடியனேன் பெரிய அம்மானே ⋆
கடுத்த போர் அவுணன் உடல் இரு பிளவாக் ⋆

கை உகிர் ஆண்ட எம் கடலே ⋆
அடுத்ததோர் உருவாய் இன்று நீ வாராய் ⋆
எங்ஙனம் தேறுவர் உமரே ‖ **8.1.3** ‖

உமர் உகந்துகந்த உருவம் நின் உருவம் ஆகி ⋆
உன் தனக்கன்பர் ஆனார் ⋆
அவர் உகந்தமர்ந்த செய்கை உன் மாயை ⋆
அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன் ⋆
அமர் அது பண்ணி அகல் இடம் புடை சூழ் ⋆
அடு படை அவித்த அம்மானே ⋆
அமரர் தம் அமுதே ! அசுரர்கள் நஞ்சே ⋆
என்னுடை ஆர் உயிரேயோ ! ‖ **8.1.4** ‖

ஆர் உயிரேயோ ! அகல் இட முழுதும் ⋆
படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்த ⋆
பேர் உயிரேயோ ! பெரிய நீர் படைத்து ⋆
அங்குறைந்தது கடைந்தடைத்துடைத்த ⋆
சீர் உயிரேயோ ! மனிசர்க்குத் தேவர் போல ⋆
தேவர்க்கும் தேவாவோ ⋆
ஒர் உயிரேயோ ! உலகங்கட்கெல்லாம் ⋆
உன்னை நான் எங்கு வந்துறுகோ ‖ **8.1.5** ‖

எங்கு வந்துறுகோ என்னை ஆள்வானே ⋆
ஏழ் உலகங்களும் நீயே ⋆
அங்கவர்க்கமைத்த தெய்வமும் நீயே ⋆
அவற்றவை கருமமும் நீயே ⋆
பொங்கிய புறம்பால் பொருள் உள ஏலும் ⋆
அவையுமோ நீ இன்னே ஆனால் ⋆

மங்கிய அருவாம் நேர்ப்பமும் நீயே ⋆
வான் புலன் இறந்ததும் நீயே ॥ **8.1.6** ॥

இறந்ததும் நீயே எதிர்ந்ததும் நீயே ⋆
நிகழ்வதோ நீ இன்னே ஆனால் ⋆
சிறந்த நின் தன்மை அதுவிதுவுதுவென்று ⋆
அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன் ⋆
கறந்த பால் நெய்யே ! நெய்யினின் சுவையே ! ⋆
கடலினுள் அமுதமே ⋆
அமுதில் பிறந்த இன் சுவையே ! சுவை அது பயனே ! ⋆
பின்னை தோள் மணந்த பேர் ஆயா ! ॥ **8.1.7** ॥

மணந்த பேர் ஆயா ! மாயத்தால் முழுதும் ⋆
வல் வினையேனை ஈர்கின்ற ⋆
குணங்களை உடையாய் ! அசுரர் வன்கையர் கூற்றமே ! ⋆
கொடிய புள் உயர்த்தாய் ⋆
பணங்கள் ஆயிரமும் உடைய பைந்நாகப் பள்ளியாய் ! ⋆
பாற்கடல் சேர்ப்பா ⋆
வணங்குமாறறியேன் ⋆
மனமும் வாசகமும் செய்கையும் யானும் நீ தானே ॥ **8.1.8** ॥

யானும் நீ தானே ஆவதோ மெய்யே ⋆
அரு நரகவையும் நீ ஆனால் ⋆
வான் உயர் இன்பம் எய்தில் என் ⋆
மற்றை நரகமே எய்தில் என் எனினும் ⋆
யானும் நீ தானாய்த் தெளிதொறும் நன்றும் அஞ்சுவன் ⋆
நரகம் நான் அடைதல் ⋆

வான் உயர் இன்பம் மன்னி வீற்றிருந்தாய் ⋆
அருளு நின் தாள்களை எனக்கே ॥ **8.1.9** ॥

தாள்களை எனக்கே தலைத் தலைச் சிறப்பத் தந்த ⋆
பேர் உதவிக் கைம் மாறாத் ⋆
தோள்களை ஆரத் தழுவி என் உயிரை ⋆
அற விலை செய்தனன் சோதீ ⋆
தோள்கள் ஆயிரத்தாய் ! முடிகள் ஆயிரத்தாய் ⋆
துணை மலர்க் கண்கள் ஆயிரத்தாய் ⋆
தாள்கள் ஆயிரத்தாய் ! பேர்கள் ஆயிரத்தாய் ⋆
தமியனேன் பெரிய அப்பனே ! ॥ **8.1.10** ॥

‡ பெரிய அப்பனைப் பிரமன் அப்பனை ⋆
உருத்திரன் அப்பனை ⋆
முனிவர்க்குரிய அப்பனை அமரர் அப்பனை ⋆
உலகுக்கோர் தனி அப்பன் தன்னை ⋆
பெரிய வண் குருகூர் வண் சடகோபன் ⋆
பேணின ஆயிரத்துள்ளும் ⋆
உரிய சொல் மாலை இவையும் பத்திவற்றால் ⋆
உய்யலாம் தொண்டீர் ! நங்கட்கே ॥ **8.1.11** ॥

அடிவரவு — தேவிமார் காணுமாறு எடுத்த உமருகந்து ஆருயிர் எங்கு இறந்ததும் மணந்த யானும் தாள்களை பெரிய நங்கள்

தேவிமாராவார் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்